

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மறைந்த கழகத்தின் மூத்த முன்னோடியும், அண்ணா நகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சோ.மா.இராமச்சந்திரன் அவர்களின் உடலுக்கு நேற்று சென்னை அமைந்தகரையில் உள்ள அவரது இல்லத்தில் மலர்மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதிச் செயலாளர்கள் ந.இராமலிங்கம், ச.பரமசிவம் ஆகியோர் உள்ளனர்.

செயல் வீரர் சோ.மா.இராமச்சந்திரன் மறைந்தாரே!

1977ஆம் ஆண்டில்தான் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதி முதன்முறையாகச் சென்னை நகரில் உருவாக்கப் பட்டது.

அண்ணா நகர் தொகுதியில் கலைஞர் போட்டியிட்டார். அப் போது அப்பகுதியின் செயலாளரா கச் சோ.மா.இராமச்சந்திரன் பணியாற்றினார்.

அவரின் துணையோடும் தோழமை உணர்வோடும் அந் தத் தேர்தலில் 50 கல்வியாளர்க ளும்மாணவர்களும்இணைந்து 45 நாள்கள் தொடர்ந்து பணி யாற்றினோம்.

ஒரு பகுதிச் செயலாளர் எப்படி மக்களோடு தொடர்புகொண்டு, அனைவரையும் அன்புடன் அணைத்துச் சென்று தேர்தல் பணியாற்ற வேண்டும் என்ற அர சியல் முறைக்கு இலக்கணமாக இருந்தவர் செயல்வீரர் சோ.மா. இராமச்சந்திரன்.

'மிசா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுச் சிறையில் பல இன்னல்களை எதிர்கொண்ட வர். கலைஞருக்குப் பின் அண்ணா நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

100 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்!



1977ஆம் ஆண்டு அண்ணா நகர் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு நடந்த தேநீர் விருந்தில் எடுக்கப்பட்ட படம் இது!. **அமர்ந்திருப்போர்:** முத்தமிழறிஞர் கலைஞர், எழுத்தாளர் சாவி, முரசொலி மாறன், சோ.மா.இராமச்சந்திரன், மு.நாகநாதன்.

சில வாரங்களுக்கு முன்பு "மிசா கொடுமை" ஆவணப்பட வெளியீட்டு விழா நடைபெற்றது. அவ்விழாவில் சோ.மா.இராமச் சந்திரன் அவர்களும் கலந்து கொண்டார். என்னைப் பார்த்தவு டன் எனது கைகளை இறுகப் பற்றிக்கொண்டார். அவர் காட்டிய அன்பில் நனைந்து நெகிழ்ந்து போனேன்.

அப்படத்தில் சோ.மா.இராமச் சந்திரன் மிசாக் கொடுமைகளை விளக்கும் காட்சி இடம்பெற்றி ருந்தது.

பேராசிரியர் மு.நாகநாதன்

ஆசிரியர் வீரமணியார் உரை நிகழ்த்தியபோது, சோ.மா.இரா மச்சந்திரன் அவர்களின் கண்க ளில் கண்ணீர் வழிவதைக் கண் டேன்.

செயல்வீரர் சோ.மா.இராமச் சந்திரப் பெருமகனுக்குக் கண் ணீர் அஞ்சலி.



அண்ணாநகர் தொகுதியின் முதுபெரும் கழக முன்னோடி – முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சோ.மா.இராமச்சந்திரன் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்கள் பி.வில்சன், இரா.கிரிராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதி கழக செயலாளர்கள் ந.இராமலிங்கம், ச.பரமசிவம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி.யை அவரது இல்லத்தில் – பி.எஸ்.என்.எல். தொழிற் சங்கங்கள் மற்றும் அசோஷியேஷன்ஸ் அகில இந்திய தொழிற்சங்கக் கூட்டமைப்பின் சார்பில் நிர்வாகிகள் சந்தித்து, 3வது ஊதிய உயர்வையும், அதற்குத் தடையாக உள்ள – தொடர்ந்து மூன்று வருடங்கள் லாபமீட்டினால் மட்டுமே ஊதிய உயர்வு என்கிற நிபந்தனையை நீக்க நாடாளுமன்றத்தில் குரலெழுப்பி ஊதியமாற்றத்திற்க்கு வழிசெய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர். தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் தலைமையில் பேரவை இணைப்பொதுச் செயலாளர் ஜெ. விஜயகுமார், மாநில செயலாளர் இர்ஷாத் அலிகான், மாவட்ட செயலாளர் எம்.கௌரிசங்கர், உதயகுமார், முனீர்அலி, ரவிசந்திரன், செல்வம், தேவ், பாபு, ராஜேந்திரன் ராஜன் மற்றும் சிற்றரசு ஆகியோர் உடனிருந்தனர்.



தி.மு.க. இளைஞர் அணி



தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித்தொகை மற்றும் பொற்கிழியாகப் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர்

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ரூ.6,25,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, கழகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டுவருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வுசெய்து, இந்த நிதி உதவிகளை வழங்கிவருகிறார், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

அந்த வகையில், நவம்பர் மாதத்தில் நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு :

வ. எண்	பெயர், முகவரி
1.	மா.லோகதர்ஷினி, த/பெ மாதேஷ்வரன், 14–வது வார்டு, பெரியார் நகர், அரூர், தருமபுரி – 636 903
2.	மு.பாபு, த/பெ முத்துசாமி, 10, சொக்கம்பட்டி, கொட்டாம்பட்டி, மேலூர், மதுரை – 625 103
3.	ரா.செந்தில், த/பெ ராகதேவர், 5/ஏ, செங்கோட்டையன் குடியிருப்பு, மொடச்சூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638 476
4.	ஏ.முனுசாமி, த/பெ ஏகாம்பரம், 8, துர்கையம்மன் கோயில் வீதி, சாலையூர், ஜமீன்புதூர், மதுராந்தகம், செங்கல்பட்டு – 603 302
5.	ரா.கபாகாந்தி, த/பெ ராஜாகண்ணு, புதுமனைத் தெரு, சேந்தமங்கலம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி – 607 204
6.	ச.சோஜா, க/பெ சசிகுமார், 73, 2–வது குறுக்குத் தெரு, எஸ்.வி.எஸ்.நகர், வளசரவாக்கம், சென்னை – 600 087
7.	செ.தினேஷ் கணபதி, த/பெ செந்தில்குமார், 5/38, ராமசாமிபுரம் தெரு, டி.குண்ணத்தூர், பேரையூர், மதுரை – 625 708
8.	வெ.கல்பனா, க/பெ வெங்கடேஷ், 16/41, பருத்திவாக்கம் தெரு, ஆலந்தூர், சென்னை – 600 016
9.	ம.லக்கீஸ்வரன், த/பெ மணி, சி/66, ஹவுசிங் யூனிட், காந்திபுரம், கொல்லம்பாளையம், ஈரோடு – 638 002
10.	லோ.விஜய் கார்த்திகேயன், த/பெ லோகநாதன், 18, ஆஸ்பத்திரி தெரு, தம்மம்பட்டி, கெங்கவல்லி, சேலம் – 636 113
11.	ந.காளிதாஸ், த/பெ நடேசன், 1/113, வடக்குத் தெரு, நங்காளி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் – 614 715
12.	ஞா.ஷைனி, த/பெ ஞானசேகரன், சமத்துவபுரம், ஆமாஞ்சி, அறந்தாங்கி, புதுக்கோட்டை – 614 616
13.	உ.தன்வந்த், த/பெ உதயகுமார், 1/132, மக்கிரிபாளையம், சௌதாபுரம், குமாரபாளையம், நாமக்கல் – 638 008
14.	சா.மேகநாதன், த/பெ சாமிக்கண்ணு, 2/213, ஆலமர வட்டம், அண்ணாண்டபட்டி, கருப்பனூர், திருப்பத்தூர் – 635 602
15.	தி.சுப்ரமணியன், த/பெ தியாகராஜன், 6, டிஸ்பென்சரி சாலை, பீளமேடு, கோயம்புத்தூர் – 641 004
16.	இ.சண்முகபாரதி, த/பெ இளங்கோவன், 26, தேரடித் தெரு, போடிநாயக்கனூர், தேனி – 625 513
17.	ச.ஜெகதீசன், த/பெ சதீஷ்குமார், 28–அ, அரவிந்த் நகர், கோவர்த்தனகிரி, ஆவடி, திருவள்ளூர் – 600 071
18.	தி.தரணிதரன், த/பெ திருப்பதி, 2, அன்னை இல்லம், கென்னடி வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர் – 641 652
19.	தே.ஞானசேகர், த/பெ தேசப்பன், 1, 2–வது தெரு, முகத்துவாரக் குப்பம், எண்ணூர், சென்னை – 600 057
20.	மு.லோக மீனாட்சி, த/பெ முத்துகுமார், 3–1–47, கிருஷ்ணன் கோயில் தெரு, ஆயக்குடி, தென்காசி – 627 852
21.	மு.ராமு, க/பெ முத்து, 23/45, பூங்குடியார் வீடு, சி.எம்.தெரு, காரைக்குடி, சிவகங்கை – 630 001
22.	சு.கலைச்செல்வி, க/பெ சுகுமாரன், 4/9, சாய் பவனம், ஜெயராம் நகர், தெலுங்குபாளையம், கோயம்புத்தூர் – 641 039
23.	க.சையத், த/பெ கனிபாய், 33, அக்கையா சாலை, திருத்தணி, திருவள்ளூர் – 631 209
24.	ர.லோகேஷ், த/பெ ரவி, 160, மதனகோபாலபுரம், பெரம்பலூர் – 621 212
25.	சி.செபாஸ்டின், த/பெ சிறுமணி, 88/23, கோயில் வீதி, கிழக்கு மரியநாதபுரம், நாகல் நகர், திண்டுக்கல் – 624 003

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 31.10.2026

கலைஞர் 100 1924 - 2023